கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.398/2017** தேதி: **03.11.2025**

பிரதிவாதி தரப்பு சாட்சி -1 (வாசு, த/பெ.தங்கராசு ) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

(1) வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வழக்கு சொத்தானது வாதிக்கு பாத்தியம் என்று தாக்கல் செய்துள்ளார். வாதியின் தாத்தா பெயர் என்ன என்றால் முனிசாமி கவுண்டர் ஆகும். வாதியின் அப்பா பெயர் ஜெயராமக்கவுண்டர் ஆகும். வேல்முருகனின் தாத்தா பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது.

(2) எனக்கு தற்போது என்ன வயது ஆகிறது என்றால் 59 ஆகிறது. வாதி மற்றும் பிரதிவாதி வசிக்கும் ஊர் வேறு என்றாலும் நான் வசிக்கும் ஊர் வேறு என்றாலும் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். எனக்கு நிலம் எங்கு உள்ளது என்றால் வழுதளம்பட்டு பஞ்சாயத்தில் உள்ளது. அங்கு எந்த கிராமத்தில் உள்ளது என்றால் பிள்ளைவீட்டு காடு என்ற கிராமத்தில் உள்ளது. எனக்கு நிலம் உள்ளது என்பதை காண்பிக்க ஏதேனும் ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சுப்ரமணியபுரத்தில் இருந்து கோதண்டராமபுரம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் தோராயமாக 1½ கி. மீ இருக்கும்.

(3) சுப்ரமணியபுரத்தை தாண்டிதான் கோதண்டராமபுத்தினை அடைய முடியும் என்றால் சரிதான். எனக்கு கோதண்டராமபுரத்தில் நிலம் இல்லை என்றால்

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.11.03 16:38:11 +0530

சரிதான். எனக்கு வீடு சுப்ரமணியபுரத்தில் மெயின் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். எனது நல்லது கெட்டது அனைத்திற்கும் கோதண்டராமபுரத்திற்கு போகவேண்டிய அவசியம் ஏற்படாது என்றால் சரியல்ல. எனது நட்பு வட்டாரத்தினை பார்க்க ஒரு நாளைக்கு இரு தரம் செல்வேன்.

(4) வேல்முருகனின் சகோதரர் பெயர் என்ன என்றால் வேல்மணி, சிவகொழுந்து ஆகும். வேல்முருகனின் குடும்பத்தை எங்கு சென்று சந்திப்போன் என்றால் அவரது வீட்டிற்கும் செல்வேன் நிலத்திற்கும் சென்று சந்திப்பேன். வேல்முருகனை தவிர நட்பிற்காக வேறு யாரை சந்திக்க செல்வேன் என்றால் பழனிவேல் மற்றும் சரவணன் ஆகியோரை மற்றும் பலரைச் சந்திக்க செல்வேன்.

(5) பழனிவேல் என்பவர் மீது ஜெயசந்திரன் பணம் கொடுக்க வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. ஆகவே பழனிவேல் மீது ஜெயசந்திரன் விரோதம் கொண்டு என்னை இன்று இங்கு சாட்சியம் அளிக்க அனுப்பி உள்ளார் என்றால் சரியல்ல. பழனிவேல் என்ன செய்கிறார் என்றால் அவரும் விவசாயம் தான் செய்கிறார். அவரது நிலம் என்னுடைய நிலத்திற்கு அருகில் தான் உள்ளது.

(6) வழக்கில் எத்தனை ஆயிட்டம் சொத்துக்கள் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் சக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது.

(7) ஏற்கனவே வழக்கு சொத்தின் அருகில் நீரோடை இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. வேல்முருகன் குடும்பத்துடன் நான் 40 வருடமாக எனக்கு பழக்கம்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.11.03 16:38:16 +0530

என்று நான் தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை வழக்கு சொத்தில் நீரோடை இருந்தது என்றால் எனக்கு தெரியாது. நான் 40 சென்று வரும் போது அந்த நீரோடையை பார்க்கவில்லையா என்றால் பார்க்கவில்லை.

(8) என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் " வேல்முருகன் மற்றும் அவருடைய சகோதரர்கள் குடியிருக்கும் அதே கிராமத்தில் நான் குடியிருந்து வருவதால்"என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் தவறுதான். நான் பக்கத்து கிராமத்தில் வசித்து வருகிறேன். மேலும் என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் "வழக்கு சொத்திற்கு சிறுது தொலைவில் நான் குடியிருந்து வருகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமான வாக்குமூலத்தை நான் படித்துதான் கையொப்பம் இட்டுள்ளேன் என்றால் சரிதான்.

(9) என்னுடைய வாக்குமூலத்தில் நான் வாதி இருக்கும் அதே கிராமத்தில் வசித்து வருகிறேன் என்று இருப்பதை படித்து பார்த்தும் தவறாக கையொப்பம் இட்டுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு என்னுடைய கவணக்குறைவே காரணம்.

(10) வாக்குமூலத்தினை நான் சரியாக படிக்காமல் பொய்யான அம்சங்கள் உள்ள வாக்குமூலத்தில் கையொப்பம் இட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வேல்முருகனும் அவரது சகோதரர்களும் வழக்கு சொத்தில் சுவாதினத்தில் இருப்பதாக கூறியுள்ளதற்கு ஏதேனும் ஆவணம் பார்த்தேனா என்றால் இல்லை. நான் வேல்முருகனும் அவரது சகோதரர்களும் முன்பாக அவரது தகப்பனார் சுவாதினத்தில் இருந்ததாக கூறியுள்ளதற்கு ஏதேனும் ஆவணம் பார்த்தேனா என்றால் இல்லை.

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.11.03 16:38:21 +0530

(11) வேல்முருகன் அவரது அப்பா தாத்தா காலத்தில்இருந்த அனுபவித்து வந்தார் என்று கூறியுள்ளேன் என்றாலும் அதனை அந்த நீரோடை வழியாகத்தான் அனுபவித்து வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு தெரியாத விஷயத்தை புரட்டி நான் வேல்முருகனின் தாத்தா மற்றும் அப்பா அனுபவித்து வந்தார்கள் என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நிலத்தை அனுபவித்தார்கள் நீரோடைப்பற்றி எனக்கு தெரியாது.

(12) வழக்கு சொத்தின் விஸ்தீரனம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண் சக்குபந்தி மற்றும் விஸ்தீரனம் தெரியாமலேயே வேல்முருகன் வழக்குசொத்தில் கரும்பு மற்றும் வாழை பயிர் செய்துள்ளார் என்று எப்படி கூறுகிறேன் என்றால் நான் சென்ற போது அங்கு அந்த பயிர்கள் இருந்தது.

(13) அந்த பயிர் அங்கு இருந்த காரணத்தால் அது வேல்முருகனுக்கு பாத்தியம் என்று கூறுகிறேன் என்றால் சரிதான். கரும்பு மற்றும் நெல்லிற்கு நான் எந்த அவணமும் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து எந்த அழைப்பானையும் வரவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்கனவே நீதிமன்றத்தில் பல வழக்குகள் உள்ளது என்றால் சரியல்ல. நான் தற்போது தான் நீதிமன்றத்திற்கு வருகேிற்ன.

(14) வேல்முருகனுக்கு நட்பு வட்டாரத்தில் பெயரில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய வாக்குமூலத்தில் நான் அந்த வழியாக தினமும் செல்வேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் விசாரணையில் அவர் பயிர் வைத்திருந்தார் என்றும் அதை பார்த்தேன் என்று கூறி முன்னுக்கு பின்னாக முரனாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.11.03 16:38:26 +0530

(15) நான் அவர் பயிர் செய்வதை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு அடுத்தடுத்து வேறு சர்வே எண்கள் உள்ளது என்றாலும் எனவே வழக்கு சொத்தை வேல்முருகன் தான் பயிர் செய்கிறார் என்று சொல்வது தவறு என்றாலும் வழக்கு சொத்தின் சர்வே எண்கள் பற்றி எனக்கு தெரியாது.

(16) நான் வேல்முருகனின் நண்பரே கிடையாது என்றாலும் கையூட்டு பெற்றுதான் சாட்சியம் அளிக்கவந்தேன் என்றாலும் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று .

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.11.03 16:38:31 +0530

***Additional District Munsif , Cuddalore.***